**பிரதமருக்கு குவைத்தின் உயரிய தேசிய விருது வழங்கப்பட்டது**

டிசம்பர் 22, 2024

குவைத்தின் உயரிய விருதான ஆர்டர் ஆஃப் முபாரக் அல்-கபீரை பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு குவைத்தின் அமீர் ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபா வழங்கினார். குவைத் பிரதமர் ஷேக் அகமது அல்-அப்துல்லா அல்-அஹ்மத் அல்-சபாவும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

2.இந்தியாவுக்கும் குவைத்துக்கும் இடையிலான நீடித்த நட்புறவுக்கும், குவைத்தில் உள்ள இந்திய சமூகத்துக்கும், இந்தியாவின் 1.4 பில்லியன் மக்களுக்கும் இந்த விருதை பிரதமர் அர்ப்பணித்தார்.

3.43 ஆண்டுகளுக்குப் பிறகு குவைத் சென்ற இந்தியப் பிரதமர், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தின் போது விருதைப் பெற்றிருப்பது நிகழ்வை மேலும் சிறப்புறச் செய்தது.

4. இந்த விருது 1974ல் நிறுவப்பட்டது, அதன் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட உலகத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது.

**குவைத்**

**டிசம்பர் 22, 2024**